தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 24, சுபானு—திருவள்ளுவர் ஆண்டு 2034

2003 மே 7, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது"

பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவர்களைப் பசி என்னும் கொடிய நோய் அணுகுவது இல்லை.

[**குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. அறிவிப்பு

பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைகள் மற்றும் மாநில நூலகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவைகளுக்கும், மாநில நூலகக் குழுவிற்கும் அவற்றின் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத் தாள்கள் வரப்பெற்றுள்ளன. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை; அறிவிப்பு முடியட்டும்.

சென்னைப் பல்கலைக்கழகம்
உறுப்பினர்கள்

ஆட்சிமன்றப் பேரவை—

திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு
திரு. ஏ. பூவராகமூர்த்தி
திரு. சி.வி. சண்முகம்
திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்
திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி
திரு. ஜெ. அன்பழகன்

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்
உறுப்பினர்கள்

ஆட்சிமன்றப் பேரவை—

திரு. ஆர்.டி. கணேசன்

திரு. லா. சந்தானம்

திரு. ஆ. ராஜகோபால்

திரு. டி.பி.எம். மைதீன்கான்

பாரதிதாசன் பல்கலைக்கழகம்
உறுப்பினர்கள்

ஆட்சிமன்றப் பேரவை—

திரு. ப. இராஜரெத்தினம்

மாநில நூலகக் குழு—
உறுப்பினர்

திரு. செ.கு. தமிழரசன்

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், மேற்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள், அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.......